| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர். சி. உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்<br>இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி<br>அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் |

**ந.க.எண். 086254 / எப்1 /2020** **நாள்.23 .02.2021**

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பெயர்பட்டியல் தயாரிக்கும் பணி – பள்ளி மாணவர்களின் விவரங்களை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்வதற்கும், தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கும் கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:27.01.2021
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதம், நாள்:11.02.2021

------

2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணவர்களது விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, தேர்வுக் கட்டணத்தினை செலுத்துவதற்கு **01.02.2021 முதல் 22.02.2021** வரையிலான நாட்கள் வரை பள்ளிகளுக்கு ஏற்கனவே கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்நிலையில், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட / புதிதாக அங்கீகாரம் வழங்கப்பட்ட பள்ளிகளில் தற்போது மாணவர் சேர்க்கை நடைபெறுவதால், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு பயிலும் பள்ளி மாணவர்கள் பெயர்பட்டியல் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள வழங்கப்பட்ட கால அவகாசத்தை நீட்டிக்கக் கோரி சில முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் இருந்து கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

எனவே, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கும், இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தினை செலுத்துவதற்கும் **24.02.2021** முதல் **25.02.2021 வரையிலான நாட்கள் வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது. இதுவே,** பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணிக்காக வழங்கப்படும் **கடைசி வாய்ப்பாகும். இதன்பின்னர், இப்பணிக்காக எக்காரணம் கொண்டும் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.**

எனவே, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்களது ஆளுகைக்குட்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் அனைவரும், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை **25.02.2021** –க்குள் நிறைவு செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–

**இயக்குநர்**

<u>நகல்:</u>

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்

2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்